N

நாமக்கல் மாவட்டம்

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு, நவம்பர் - 2019

## பத்தாம் வகுப்பு

நேரம் : 1.15 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×1=7

1) தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) சிலப்பதிகாரம்

2) 'தூசும் துகிரும்' என்பன உணர்த்தும் பொருள் முறையே
அ) பட்டும் பவளமும் ஆ) பவளமும் பட்டும்
இ) முத்தும் மணியும் ஈ) அகிலும் சந்தனமும்

3) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போரிடுவதன் காரணம் ______
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

4) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

5) மறுமை நோக்கிக் கொடுக்காத வள்ளல்கள் இருவர் ______, ______
அ) பாரி, காரி ஆ) ஓரி, எழினி இ) ஆய், பேகன் ஈ) அதியமான், நள்ளி

6) பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.
"ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக."
மேற்குறிப்பிட்டுள்ள பாடலில் 'அவனும் யானும்' எனக் குறிப்பிடப்பட்டவர்கள் யார்?

7) இப்பாடல் இடம் பெற்ற கவிதைத் தொகுப்பு எது?

பகுதி - II

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(12-ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) 3×2=6

பிரிவு - 1

8) விடைக்கேற்ற வினா அமைக்க
   1. சித்தரைத் திங்களில் நடத்தப்படும் பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.
   2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்.

9) மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம் என்ன?

10) உரைமடைப்பாட்டு குறிப்பு எழுதுக.

11) உண்மையான செல்வம் எதுவென நற்றிணை குறிப்பிடுகிறது?

12) 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2×3=6

13) 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

14) வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க

15) ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயம் கையில் வைத்திருக்க வேண்டியவை எவை?

www.Padasalai.Org

பிரிவு - 3

**எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.** **3×2=6**

16) பின்வரும் தொடரைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க
 1. 'முன்னுக்குப் பின்' 2. 'இரவு பகலாக'

17) ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.
 1. உதகமண்டலம் 2. கும்பகோணம்

18) மரபுத் தொடருக்கான பொருளையறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
 'அள்ளி இறைத்தல்'

19) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
 அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனப் பாத்தே ரொம்ப நாளாச்சு!

20) கலைச்சொல் அறிவோம்
 அ. Belief ஆ. Document

பகுதி - III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2×2=4**

பிரிவு - 1

21) வெண்பாவின் வகைகள் யாவை?

22) மேவன செய்தொழுக லான் - இவ்வடிக்குரிய அசைகளையும், வாய்பாடுகளையும் எழுதுக.

23) பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
 "கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்
 பொன்செய் கொல்லரும் நண்கலம் தருநரும்."
 1. இப்பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
 2. நன்கலம் - இலக்கணக் குறிப்பு தருக.

பிரிவு - 2

**எவையேனும் 3 வினாவிற்கு விடையளி.**
**(27-ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** **3×3=9**

24) படம் உணர்த்தும் கருத்தை நயமுற நான்கு தொடர்களில் எழுதுக.



25) பழங்காலக் கல்வெட்டுகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் உங்களால் இயன்ற செயல்களை எழுதுக.

26) தொகைச் சொற்களைப் பிரித்தெழுதி, தமிழ எண்ணுரு தருக.
 மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, முப்பாலையும் ஐந்திணைகளையும் அழகுறத் தந்தாய். அதனால் நானிலத்தில் உன் பெருமை எட்டுத்திக்கும் பரவிப் புகழ் பெற்றது.

27) மாற்றம் எனது ... எனத் தொடங்கும் காலக் கணிதம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2×6=12**

28) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

29) சங்க இலக்கியங்களில் போற்றப்படும் அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களை குறிப்பிட்டு விளக்குக.

30) மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் தலைப்பில், கொடுக்கப்பட்டுள்ள சாதனைப் பெண்கள் இருவரைப் பற்றி விவரித்து எழுதுக.

31) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**********

ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல்(மாவட்டம்) - 637 202
அலைபேசி 99655-31727, 99655-35967

# பத்தாம் வகுப்பு - தமிழ்

## இரண்டாம் இடைப்பருவத்தேர்வு நவம்பர் - 2019

நேரம்: 1.15 மணி　　　　　　　　　　மொத்த மதிப்பெண்கள் : 50

**TENTATIVE ANSWER KEY**

## விடைக்குறிப்பு

| | பகுதி – 1(மதிப்பெண்கள் - 14) | 7x1=7 |
|---|---|---|
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** | |
| 1 | ஈ) சிலப்பதிகாரம் | 1 |
| 2 | அ) பட்டும் பவளமும் | 1 |
| 3 | இ) வலிமையை நிலைநாட்டல் | 1 |
| 4 | இ) இடையறாது அறப்பணி செய்தலை | 1 |
| 5 | இ) ஆய், பேகன் | 1 |
| 6 | இறைவன், கவிஞன் | 1 |
| 7 | கண்ணதாசன் கவிதைகள் என்னும் கவிதைத்தொகுப்பில் - காலக்கணிதம் | 1 |
| | **பகுதி – II (மதிப்பெண் 20)**<br>**பிரிவு – 1(12 கட்டாய வினா)** | 3x2=6 |
| 8 | 1. தமிழர் பண்பாட்டின் மகுடமாக நடத்தப்படும் விழா எது?<br>2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன யார்? | |
| 9 | **மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம்:**<br>❖ அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள். அழியாத வகையில் இருப்பதற்காகவே மெய்க்கீர்த்தி பாடப்பட்டது. இதற்கு முன்னோடி பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள்.<br>❖ பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் செப்பேடுகளிலும் தொடங்கியது இப்பழக்கம். சோழர் காலத்தில் மெய்க்கீர்த்தி என்று பெயர் பெற்றது. | 1<br>1 |
| 10 | **உரைமடைப்பாட்டு:**<br>❖ உரையிடையிட்ட பாட்டுடை செய்யுள் என்பது 'உரைப்பாட்டு மடை' என்னும் தமிழ்நடை.<br>❖ இது சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகிறது.<br>❖ உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு என்பது பொருளாகும்.<br>❖ வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை. | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 11 | **உண்மையான செல்வம்:**<br>பிறர் துன்பம் தீர்ப்பது தான் உண்மையான செல்வம் என நல்வேட்டனார் நற்றிணையில் குறிப்பிடுகின்றார். | 2 |
| 12 | *குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்*<br>*சுற்றமாச் சுற்றும் உலகு.* | 2 |
| | **பிரிவு - 2** | **2x3=6** |
| 13 | **தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் :**<br>**இடம் :**<br>'சிற்றகல் ஒளி' என்னும் 'ம.பொ.சி'யின் வரலாற்றுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள் :**<br>ஆந்திரமாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திர மாநிலத் தலைவர்களும் நீதிபதி வாஞ்சுவும் விரும்பினர். அதனை எதிர்த்து ம.பொ.சி.கூறிய கூற்று இது.<br>**விளக்கம் :**<br>முதல்வர் இராஜாஜிக்கு நிலைமையின் தீவிரத்தை உணர்த்தியபோது, தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் அவர் முன்வந்தார். மாநகரத்தந்தை செங்கல்வராயன் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அப்பொழுது, தமிழ் மாநிலத்தின் தலைநகர் 'சென்னை' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தனர். முன்மொழிந்து 'தலையைக்கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று ம.பொ.சி. முழங்கினார். 25.3.1953ல் பிரதமர் நேரு, சென்னை தமிழருக்கே என்ற உறுதிமொழியை நாடாளுமன்றத்தில் நடுவணரசின் சார்பில் வெளியிட்டார். | 1<br><br>1<br><br>1 |
| 14 | 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்' தைத் திருநாளை எதிர்பார்த்தும் நாம் அனைவருமே காத்திருப்போம். இதற்கான ஆயத்த வேலைகள் கிராமப்புறங்களில் சிறப்பாக நடைபெறும். அவ்வேலைகளில் ஒன்று வீடுகளுக்கு வண்ணம் தீட்டுதல், **வாளியில் தண்ணீர்** எடுத்து வந்து கொடுப்பவர் ஒருவர், **சாயக்குவளைகளைக்** கொண்டு வந்து அதில் பல வண்ணங்களைக் கலந்து பதிய வண்ணங்களை உருவாக்கிக் கொடுப்பவர் ஒருவர்.<br>வண்ணம் பூச **கட்டையில் பொருந்திய தூரிகையைப்** பயன்படுத்துவர். வண்ணம் பூசும்போது துடைக்கவும், அழுக்கானப் பகுதிகளில் உள்ள அழுக்கைக் கழுவித் துடைக்கவும் **கந்தைத் துணியைப்** பயன்படுத்துகிறோம். | 3 |
| 15 | **ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயம் கையில் வைத்திருக்க வேண்டியவை :**<br>❖ ஓட்டுநர் உரிமம்<br>❖ ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்<br>❖ ஊர்திக்குச் செலுத்திய வரிச் சான்றிதழ்<br>❖ ஊர்திக் காப்பீட்டுச் சான்றிதழ்<br>❖ மகிழுந்து, சரக்குந்து போன்ற வண்டிகள், அப்பகுதிகளில் ஓட்டுவதற்கான இசைவுச் சான்றிதழ் | 3 |

| | | |
|---|---|---|
| | **பிரிவு - 2** | **3x2=6** |
| 16 | 1. **முன்னுக்குப் பின்**<br>குமரன் **<u>முன்னுக்குப்பின்</u>** முரணாகப் பேசுகிறான்.<br>2. **இரவு பகலாக**<br>என் தந்தை **<u>இரவு பகலாக</u>** அயராது பாடுபட்டார். | 1<br>1 |
| 17 | **ஊர்ப் பெயர்களின் மரூஉ பெயர்கள்:**<br>1. உதகை<br>2. குடந்தை | 1<br>1 |
| 18 | **மரபு தொடருக்கான பொருள்:**<br>**அள்ளி இறைத்தல்**<br>உழைக்காமல் பெற்ற பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்யாமல் அதற்கு இதற்கு என்று அள்ளி இறைத்தான் முருகன். | 2 |
| 19 | **எழுத்து வழக்கு:**<br>'அண்ணா! சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்தே நீண்ட நாள்களாயிற்று?" | 2 |
| 20 | **கலைச்சொல்:**<br>அ) நம்பிக்கை<br>ஆ) ஆவணம் | 1<br>1 |
| | **பகுதி – III (மதிப்பெண் 50)**<br>**பிரிவு – 1** | **2x2=4** |
| 21 | வெண்பா **ஐந்து** வகைப்படும். அவையாவன:<br>❖ குறள்வெண்பா<br>❖ சிந்தியல் வெண்பா<br>❖ நேரிசை வெண்பா<br>❖ இன்னிசை வெண்பா<br>❖ ப.ஃறொடை வெண்பா ஆகியவையாகும். | 1<br>1 |
| 22 | **அசை மற்றும் வாய்ப்பாடு :**<br>சீர் \| அசை \| வாய்பாடு<br>மே/வன \| நேர் நிரை \| கூவிளம்<br>செய் /தொழு/க \| நேர் நிரை நேர் \| கூவிளங்காய்<br>லான் \| நேர் \| நாள் | 2 |
| 23 | **1. கண்ணுள் மண்ணீட்டு**<br>**2.** பண்புத்தொகை | 1<br>1 |
| | **பிரிவு – 2**<br>**(27 வினா கட்டாய வினா)** | **3x3=9** |
| 24 | ❖ பழங்காலம் தொட்டே வீரம் மிகுந்த நாடு நம் தமிழ்நாடு.<br>❖ எதிரிகளை வீழ்த்தி வீறுநடைபோடும் படைகள் நம்முடைய **காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை** இந்த முப்படைகளும் உலகிலேயே சிறந்த படையாகக் கருதப்படுகிறது.<br>❖ "இப்படைக்கு அஞ்சா எப்படை உண்டு" இந்த உலகத்திலே வீரம் மிக்கவர்கள், உடல்வலிமையானவர்கள் இந்த காலாட்படை வீரர்கள்.<br>❖ அதேபோல் குதிரைப்படைவீரர்கள் குதிரைக்கு நிகரான வலிமையுடையவர்கள். | 3 |



Padasalai ஸ்ரீ வித்யபாரதி - தமிழ்

**25**

- ❖ கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.
- ❖ அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.
- ❖ கல்வெட்டுகள் குறித்து செய்திகளை எல்லோரும் அறியும் வண்ணம் செய்வேன்.
- ❖ கல்வெட்டுகளை மாணவர்கள் அறியும்படி வரலாற்றுச் சின்னங்கள் உள்ள இடங்களுக்குச் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வேன்.

3

**26**

| வ.எ | தொகைச் சொற்கள் | பிரிப்பு முறை | தொகை விரி | தமிழெண் |
|---|---|---|---|---|
| (i) | மூவேந்தர் | மூன்று+ வேந்தர் | சேரர், சோழர், பாண்டியர் | ங வேந்தர் |
| (ii) | நாற்றிசை | நான்கு+ திசை | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு | ச திசை |
| (iii) | முத்தமிழ் | மூன்று+ தமிழ் | இயல், இசை, நாடகம் | ங தமிழ் |
| (iv) | முப்பால் | மூன்று+ பால் | அறம், பொருள், இன்பம் | ங பால் |
| (v) | ஐந்திணை | ஐந்து+ திணை | குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல், பாலை | ரு திணை |
| (vi) | நானிலம் | நான்கு+ நிலம் | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் | ச நிலம் |
| (vii) | எட்டுத்திசை | எட்டு+திசை | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு | அ திசை |

3

**27**

**காலக்கணிதம்**

*மாற்றம் எனது மானிடத் தத்துவம்;*

*மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!*

*எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை*

*என்ப தறிந்து ஏகுமென் சாலை!*

*தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;*

*தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!*

*கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!*

*உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;*

*நானே தொடக்கம்; நானே முடிவு;*

*நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!*

*– கண்ணதாசன்*

3

| | பிரிவு – 3 | 2x6=12 |
|---|---|---|
| 28 | **சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் :**<br>❖ சிலப்பதிகாரத்தில் வணிகம் செய்ய வீதிகளே இடமாக அமைந்திருந்தது. வணிகர்கள் பொருள்களைக் கூவிவிற்றதையும் காணமுடிகிறது.<br>❖ மக்கள் தெருக்களில் அமர்ந்து, எவ்வகையான விளம்பரங்களும் இன்றி வணிகம் செய்தனர் மருவூர்பாக்க வணிகவீதிகளில் பலவகையான பொருள்களை வணிகம் செய்யும் தொல்வாணிகக் குடியினரைக் காணமுடிகிறது.<br>❖ தங்கம், இரத்தினம், வெள்ளி, செம்பு, இரும்பு என எல்லாப் பொருள்களும் கிடைத்ததையும் அரிசி, எண்வகையான தானியங்கள், உப்பு, இறைச்சி என்பதுடன் பிட்டு, அப்பம் விற்போரையும் காணமுடிந்தது.<br>❖ மருவூர்ப்பாக்க வணிக வீதியில் யாழ், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை இசைத்து எழுவகையான சுரங்களுடன் பாடும் பெரும்பாணர்கள் வந்தனர்.<br>❖ வணிகர்கள் அக்காலத்தில் ஒருபொருளைக் கொடுத்து மறுபொருளைப் பெற்றனர். இங்கு பண்டமாற்று வணிகம் நடைபெற்றது.<br>**இக்கால வணிக வளாகங்களும், அங்காடிகளும் :**<br>❖ இக்காலத்தில் வணிகம் நடைபெற மிகப்பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டு பல்வேறு வணிகங்கள் நடைபெறும் வணிக வளாகங்கள் உள்ளன. பொருள்களை விற்பனை செய்ய பலவகையான விளம்பரங்கள், விளம்பரச் சுவரொட்டி பத்திரிக்கைகளில் விளம்பரங்கள், தொலைக்காட்சி விளம்பரம், வலைதளங்களில் விளம்பரம் எனப் பொருள்கள் விளம்பரப் படுத்தப்படுகின்றன.<br>❖ உலக வியாபாரமாக்கப்பட்டதில் வணிகங்கள் செய்வோர்கள் பலரையும் காண முடிகிறது. பல கல்வி பயின்றோர்கள் வணிகம் செய்வதையும் காணலாம். தங்கம், வெள்ளி விற்பனைக்கும் ஆபரணக்கடைகள் எனப் பலவும் காணப்படுகின்றன.<br>❖ பலவகையான அணிநகைகள் விதவிதமாக அடுக்கி வைத்து, வாங்குவோர் மனதைக் கவருவதாக அழகுபடுத்தப்பட்டுள்ளது. வீட்டு உபயோகப் பொருள்களும், உணவுப் பொருள்களும் சிறிய அளவு முதல் பெரிய அளவு வரையில் அடைக்கப்பட்டுக் கிடைக்கின்றன.<br>❖ காய்கறிகள், பழவகைகள் என எல்லா வகையானவையும், எல்லாக் காலங்களிலும் கிடைக்கின்றன. வணிக வளாகங்களில் இசை நிகழ்ச்சிகள், பாட்டு, நடனம் எனப் பலவும் நடைபெறுகிறது. குழந்தைகள் பொழுது போக்கிற்கெனவும், விளையாடவும் பல்வேறு சாதனங்கள் இலவசமாகவும், கட்டணம் செலுத்தி விளையாடவும் அமைக்கப்பட்டுள்ளன. 'மால்' என அழைக்கப்படும் இவ்வணிக வளாகத்தில் கிடைக்காத பொருள்களே இல்லை.<br>❖ உலகம் முழுவதிலும் உற்பத்தியாகும் எல்லாப் பொருளையும் இங்கு வாங்கலாம். பணம், கடன் அட்டைகள் கொண்டும் பொருள்களை வாங்கலாம். தவணை முறையில் நிபந்தனைகளுடன் பொருள்களை வாங்க முடிகிறது. | 6 |

| | | |
|---|---|---|
| 29 | **சங்க இலக்கியங்களில் போற்றப்படும் அறங்கள்:**<br>**அரசியல் அறம் :**<br>'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'<br>'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்'<br>மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அறநெறியே அரசின் முதல் வெற்றியாகும்.'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' என்பதும் மன்னனது செங்கோலும் வெண்கொற்றக்குடையும், அறத்தின் கூறுகளாகும். அரசன் நீர்வளம் பெருக்கி, உணவுப் பெருக்கம் காண்பதும், அனைவருக்கும் அவற்றைக் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமை எனக்கூறப்பட்டது. இவையாவும் இன்றைய அரசுக்கும் பொருந்தும். கல்வியும், நீர்வளமும், உணவும், இன்றைக்கும் சவாலாகவே உள்ளது. எனவே இந்நெறி இன்றைய அரசுக்கும் பொருந்தும்.<br>**வணிகம் :**<br>வணிகம் அன்றைய காலத்தில் அறநெறியே கொண்டு, பொய் சொல்லாது, வாங்குவதிலும், விற்பதிலும் ஒரு நேர்மை இருந்தது. ஆனால் இன்றைய வணிகமோ பதுக்கல், அதிக விலைக்கு விற்றல், மிகக்குறைவாக வாங்குதல், கலப்படம் என பல செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய நாள் வணிகம் போல் செயல்பாடுகள் இருக்குமானால் நம் வணிகம் உலகின் முதன்மையாக விளங்கும்.<br>**போர் :**<br>பண்டைய போர் நெறிக்கும், இன்றையப் போர் முறைக்கும் பல வேறுபாடுகள் உண்டு. எல்லைகள் விரிந்து போரின் செயல்களும் விரிந்துள்ளன. போரின் போது உலக நாடுகளிடையேயுள்ள நெறிமுறைகள் எந்த நாட்டவருமட் முழுமையாகக் கடைபிடிப்பதில்லையோ, என எண்ணத் தோன்றுகிறது. இன்றைய போர் சாதி, மத, இனச் சண்டையாகவே உள்ளது. இதில் அறம் என்பது சிறிதும் இல்லை. எல்லோரும் பேசுவதை விட்டு அறநெறிகளைச் செயல்படுத்த வேண்டும்.<br>**வாய்மை :** வாய்மையை சிறந்த வீரமாகப் பண்டைய நாளில் கருதினர். ஆனால் வாய்மை என்று இன்று சொன்னால் சிரிப்பர். மெய்யாக, உண்மையாக வாழ்பவன் ஏமாளி, பிழைக்கத் தெரியாதவன் என்பதே உண்மையாக உள்ளது. மொத்தத்தில் வாய்மை நன்மை தரும் என்பதை உணர அறநெறிகள் வலியுறுத்துவதை மக்கள் கடைபிடிக்க வேண்டும். | 6 |
| 30 | **சாதனைப் பெண்கள் இருவர்:**<br>**எம்.எஸ். சுப்புலட்சுமி:**<br>இசைச் சூழலில் வளர்ந்த எம்.எஸ். சுப்புலட்சுமி இசை மேதை ஆனார்.பதினேழு வயதில் கச்சேரியில் பாடி பலரின் பாராட்டைப் பெற்றார். மீரா என்ற திரைப்படத்தில் நடித்ததால் இந்தியா முழுவதும் பாராட்டு இவருக்குக் கிடைத்தது. காந்தியடிகளின் முன் 'இரகுபதி இராகவ இராஜாராம்' என்ற பாடலைப் பாடினார். சென்னை வானொலியில் 1947 இல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று 'ஹரிதும் ஹரோ' என்னும் மீரா பஜன் பாடலைப் பாடினார். | 3 |

| | | |
|---|---|---|
| | 1954 இல் இவருக்கு தாமரையணி விருதும், 1974 இல் மகசேசே விருதும், இந்திய மாமணி விருதும் கிடைத்தது. இந்தி, தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கூடப் பாடியுள்ளார்.<br>**மதுரை சின்னப்பிள்ளை:**<br>இவர் மகளிரின் வாழ்வு மேம்பாட்டுக்காகப் பாடுபட்டார். எல்லாப் பெண்களோடும் இணைந்து வேலை செய்து கூலியை எல்லோருக்கும் சரிசமமாகப் பங்கிட்டவர். வயதானவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் அவரவர் திறமைக்கு ஏற்ற வேலை கொடுத்து அவர்களின் குடும்பங்களுக்கும் உதவியாக இருந்தார். நம் இந்திய நாட்டு முதன்மை அமைச்சராக இருந்த மாண்புமிகு. வாஜ்பாயிடம் 'பெண் ஆற்றல்' விருதையும், தமிழக அரசின் 'ஔவை' விருதையும், தூர்தர்ஷனின் 'பொதிகை' விருதையும் பெற்றவர். | 3 |
| 31 | அனுப்புநர் | 1 |
| | பெறுநர் | 1 |
| | விளித்தல் | |
| | பொருள் | 1 |
| | செய்தி | 2 |
| | இப்படிக்கு | |
| | இடம், நாள் | 1 |
| | உறைமேல் முகவரி | |

*****

தமிழ்த்துறை

**ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 99655-35967